செய்தி வெளியீடு எண்: 529 நாள்: 07.08.2018

செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 6.8.2018 அன்று தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் சார்பில் கோபிசெட்டிபாளையத்தில் 5 கோடியே 58 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள சேமிப்பு கிடங்கு வளாகம், கூட்டுறவுத் துறை சார்பில் 1 கோடியே 48 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள நாமக்கல் மாவட்டக் கூட்டுறவு அச்சகத்திற்கான தொழிற்கூடத்துடன் கூடிய அலுவலகக் கட்டடம் மற்றும் கடலூர் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் திட்டக்குடி வங்கிக் கிளை அலுவலகக் கட்டடம் ஆகியவற்றை திறந்து வைத்தார்கள்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கடந்த 6.5.2013 அன்று சட்டப்பேரவை விதி எண் 110–ன் கீழ் வெளியிட்ட அறிவிப்பில், தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் மூலம் சேமிப்பு கிடங்குகளை அதிகரித்து உணவு தானியங்களை முறையாக சேமித்து வைக்கும் வகையில் புதியதாக சேமிப்புக் கிடங்குகள் கட்டப்படும் என அறிவித்தார்கள்.

அந்த அறிவிப்பிற்கிணங்க, தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் சார்பில் தருமபுரி மாவட்டம், பாப்பிரெட்டிப்பட்டி வட்டம், கோபிசெட்டிபாளையத்தில் 5 கோடியே 58 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 5000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட சேமிப்புக் கிடங்கு, அலுவலகக் கட்டடம், ஊழியர் குடியிருப்புகள், சுற்றுச்சுவர் ஆகியவற்றை உள்ளடக்கிய சேமிப்புக் கிடங்கு வளாகம்;

கூட்டுறவுத் துறையின் சார்பில் நாமக்கல்லில் அமைந்துள்ள நாமக்கல் மாவட்டக் கூட்டுறவு அச்சகத்திற்கு 68 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள தொழிற்கூடத்துடன் கூடிய அலுவலகக் கட்டடம் மற்றும் கடலூர் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் திட்டக்குடி கிளைக்கு 80 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள வங்கிக் கிளை அலுவலகக் கட்டடம்;

என மொத்தம், 7 கோடியே 6 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை கட்டடங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் திறந்து வைத்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் திரு.கே.பி. அன்பழகன், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு.செல்லூர் கே. ராஜு, மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருள் வழங்கல் துறை அமைச்சர் திரு. இரா. காமராஜ், தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை முதன்மைச் செயலாளர் திரு.குமார் ஜயந்த், இ.ஆ.ப., தமிழ்நாடு சேமிப்பு கிடங்கு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திரு.சந்தோஷ் கே. மிஸ்ரா, இ.ஆ.ப., கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் முனைவர் இரா. பழனிசாமி, இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**
**நாள்: 7.8.2018**